# ஏனோக்கு

## அவிழ்க்கப்பட்ட இரகசியம்

ஓர் ஆய்வுப்பாடம்



# ஏனோக்கு

## அவிழ்க்கப்பட்ட இரகசியம்.

ஓர் ஆய்வுப்பாடம்

**"விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்."**

## எபிரெயர் 11:5

நமது ஆய்விற்கான ஆதார வசனமானது மிகவும் சுவாரஸ்யமானதும் ஆர்வத்தைக் தூண்டக்கூடிய ஒன்றாகவுமுள்ளது!
இந்த வேதாகம வசனத்தில் இரண்டு விஷயங்களை நாம் கவனிக்கிறோம் –

**முதலாவது,** ஏனோக்கு "**எடுத்துக்கொள்ளப்பட்டார்**" என்னும் விஷயம்,

மற்றும்....

**இரண்டாவது**...., ஏனோக்கு "**மரணத்தைக் காணாதபடிக்கு**" என்னும் விஷயம்

**இது மிகவும் விசித்திரமான ஒன்றாக உள்ளது!**

**இதன் பொருள் என்னவாக இருக்கும்?.....**

### ஏனோக்கு ஒருபோதும் மரிக்கவில்லையா?

நாம் பின்வருமாறு வேத வாக்கியங்களில் வாசித்திருக்க, இது எப்படி உண்மையாக இருக்க முடியும்?

**"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல....."**



ஆ! ஏனோக்கின் இந்தப் பாடமானது நீண்ட காலமாகவே வேதமாணவர்களுக்கு ஒரு **மர்மமாக** இருந்து வருகிறது. ஆம்! ஏனோக்கைப் பற்றியும், அவருக்கு உண்மையில் என்ன நேர்ந்தது என்பது பற்றியும் பலர் ஆச்சரியப்பட்டத்துண்டு!!

ஏனோக்கிற்கு உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றி பல கோட்பாடுகள் உள்ளன. பின்வரும் வார்த்தைகளில் மாபெரும் குழப்பம் உள்ளது -

**"மரணத்தைக் காணாதபடிக்கு"**

**இது எப்படி சாத்தியமாகும் என்று பலர் கேள்வி எழுப்பியுள்ளனர்!**

**1 கொரிந்தியர் 15: 22**ல் நாம் வாசித்த வேதவாக்கியத்தின்படி **எல்லாரும் மரிக்க** வேண்டும் என்று வாதிடப்படுகின்றது. எனவே ஏனோக்கும் **மரிக்க** வேண்டும்! இவ்வாறு விளக்கத்தின் மூலம், பலர் எபிரெயரின் 11 ம் அதிகாரத்தில் உள்ள மற்றொரு வசனத்தைச் சுட்டிக்காட்டி, ஏனோக்கும் உண்மையில் மரித்துவிட்டார் என விளக்குகிறார்கள்!

நாம் அதை வாசிக்கலாம் -

**எபிரெயர் 11:13**

**"இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்."**



**ஆம்! "இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல்,...... விசுவாசத்தோடே மரித்தார்கள்."**

**இந்த "எல்லாரும்" என்பதில் ஏனோக்கும் உள்ளடங்குவாரா?**

இரண்டு காரணங்களுக்காக இந்தக் கேள்விக்கான பதில்
- **இல்லை** என்பதாகும்!

***1.*** இங்குள்ள **"வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை"** என்பது, பன்மையாக இருந்தாலும், ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட மற்றும் அவருக்குப் பின் அவருடைய எல்லா தலைமுறையினரால் உறுதியாக நம்பப்பட்ட ஆபிரகாமிய வாக்குத்தத்தத்தைப் பற்றின ஒரு குறிப்பிட்ட குறிப்பைக் கொண்டிருப்பதாக நாங்கள் ஓர் ஆலோசனையாக முன்வைக்கிறோம். ஆபிரகாமுக்கு முன்பு இருந்தவர்களுக்கு எந்த **வாக்குத்தத்தமும்** வழங்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஆம்! இந்த **'வாக்குத்தத்தம்'** குறித்து ஆபேல், ஏனோக்கு மற்றும் நோவாவுக்கு எதுவும் தெரியாது, ஏனென்றால் அவர்கள் காலத்தில் அது இன்னும் கொடுக்கப்படாததாயிருந்தது! ஆகவே மரித்த 'எல்லாரும்' என்பதற்கான இந்தக் குறிப்பானது ஏனோக்கைக் குறிக்கவுமில்லை, அவரை சேர்க்கவுமில்லை.

இந்த முற்பிதாக்களுக்கான பிரதான **"வாக்குத்தத்தம்"** ஆபிரகாமிய வாக்குத்தத்தமாக இருந்தது என்கிற கருத்தைப் பற்றி நாங்கள் சரியாக பரிந்துரைத்திருக்கிறோம் என்பது, அதே அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய முடிவான கருத்துக்களுக்கு நாம் திரும்பும்போது அநேகமாக நிரூபிக்கப்பட்டுள்ளது! –

**எபிரெயர் 11:39 – "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்."**

ஆம்! **"இவர்களெல்லாரும்"** என்கிற அதே வார்த்தை பயன்படுத்தப்படுவதையும்........ மற்றும் –

**"வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமல்"** என்னும் வார்த்தைகள் கொண்டு முடிவடைவதையும் நன்கு கவனியுங்கள்

ஆம்! இது இப்போது **ஒருமையில்** உள்ளது!

***2.*** **எபிரெயர் 11:5**ல் பயன்படுத்தப்பட்டுள்ள பின்வரும் வார்த்தைகளை நாம் கவனிக்கையில் –

**"மரணத்தைக் காணாதபடிக்கு"**

... இது மிகவும் திட்டவட்டமான கூற்றாகும். அதாவது ஏனோக்கு மரிக்கக்கூடாது என்று தேவன் முன்மொழிந்து சித்தங்கொண்டிருந்தார் என்பதே அதன் அர்த்தமாகும்! இது புரிந்துகொள்வதற்கு எளிமையான பகுதியாகும்!
ஆனால்,

**“ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல.....”**

என்று கூறும் மற்றொரு வேதவாக்கியத்தின் விதியை மீறாமல் தேவன் இதை எவ்வாறு நிறைவேற்றினார் என்பதைக் குறித்து இன்று நாம் நம்முடைய ஆய்வில் காணப்போகிறோம்.

**சரி! அப்படியானால், ஏனோக்கின் இந்த மாபெரும் மர்மத்திற்கு உண்மையான பதில்தான் என்ன?**

“தேவரகசியம் நிறைவேறும்” நாட்களில் வாழ்ந்து வருவதாலும் மற்றும் “ஏற்றவேளையிலே ஆகாரத்தை” தேவன் கொடுக்கிறார் என்பதை அறிந்தவர்களாயும் நாங்கள் மகிழ்ச்சியுடன், தாழ்மையுடன் இதனை முன்வைக்கிறோம் -

## “ஏனோக்கு - அவிழ்க்கப்பட்ட இரகசியம்.”

“**எடுத்துக்கொள்ளப்பட்ட**” என்ற வார்த்தையின் அர்த்தத்தை முதலில் புரிந்துகொள்வதன் மூலம் இந்த ஆய்வினை நாம் துவங்கலாம். இது கிரேக்க வார்த்தையாகும் - **மெட்டாடிதெமி** - (கிரேக்க வார்த்தை - ஸ்ட்ராங்ஸ் # - 3346) இதன் பொருள் - “**இடமாற்றுவது**” அல்லது “**கொண்டு செல்வது**” ஆகும். இது ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு உயர்த்தப்படுவதை/ தூக்கிச்செல்லப்படுவதையோ அல்லது மாற்றப்படுவதையோ குறிக்கிறது.

**எனவே அது தான் ஏனோக்குக்கும் நடந்தது!**

அவர் தேவனால் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்பட்டார்.

**இது விசித்திரமாக இருக்கிறதா?**

இல்லை என்றே வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன!

இதுபோன்ற மற்றொரு சம்பவத்தைக் குறித்து நாம் பின்வரும் வசனங்களில் வாசிக்கலாம் –

**அப்போஸ்தலர் 8:39,40**

**“அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய**

**ஆவி பிலிப்பைக் கொண்டுபோய்விட்டது. மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.''**



ஆம்! புதிய ஏற்பாட்டில் **பிலிப்பு** எத்தியோப்பியனை ஞானஸ்நானம் செய்தபின், பரிசுத்த ஆவியின் வல்லமையால் ''காசா செல்லும் பாலைவன சாலை'' என்னும் அந்த இடத்திலிருந்து **30 கி.மீ தூரத்தில் உள்ள** ''ஆசோத்து'' என்ற இடத்திற்கு கொண்டுப்போகப்பட்டார்!!

இந்த வகையான '**எடுத்துக்கொள்ளப்படுவது**' அல்லது தெய்வீக வல்லமையால் கொண்டுப்போகப்படுவது, **2 இராஜாக்கள் 2:11** ன் பதிவின்படி, **எலியா**வின் வாழ்க்கையிலும் காணப்படுகிறது.

**எனவே இது வேதவாக்கியங்களில் அபூர்வமான ஒன்றல்ல!**

ஆனால் ஏனோக்கை **ஏன்** அழைத்துச் சென்றார், மேலும் அவர் **எங்கு** அழைத்துச் செல்லப்பட்டார் என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.

**சிலர் நினைப்பது போல, ஏனோக்கு பரலோகத்திற்குச் சென்றாரா?**

இந்தக் கேள்விக்கான பதிலை கர்த்தர் தாமே பின்வரும் வசனத்தில் தெளிவுபடுத்துகிறார்.

**யோவான் 3:13**

**''பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை..''**


இது தவிர, ''**மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது**'' என்று **1 கொரிந்தியர் 15:50** ல் நாம் வாசிக்கின்றோம் – இதின் அர்த்தம்.... மாம்ச சரீரம் பூமிக்கு வெளியே ஜீவிக்க **முடியாது** என்பதேயாகும்.



**அப்படியென்றால் ஏனோக்கு எங்கே உள்ளார்??**

ஆ! தேவனுடைய பராமரிப்பினாலும் வல்லமையினாலும் அவர் பூமியில் எங்காவது வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தக் கருத்திற்கு, **பாஸ்டர் ரசல்** அவர்களும் சான்றளித்திருப்பதை, விரிவாக்கப்பட்ட விவிலிய விளக்கவுரை**(EBC)** - இல் பக். 635ல் நாம் காணலாம். அங்கு பின்வருமாறு சகோதரர் எழுதியுள்ளார் -



**ஏனோக்கு மரிக்கவில்லை. நம்முடைய கர்த்தருடைய மரணத்தால் மீட்டுக்கொள்ளப்படும் வரையிலும், ஏனோக்கு மரண தண்டனையின் கீழ்தான் இருந்தார். (R - 2153:2 / 3378 / 619:6)**

இப்போது நாம் முக்கியமான கேள்விக்கு வரலாம் -

**1 கொரிந்தியர் 15:22 – "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல...."**

மற்றும்....

**ஆதியாகமம் 2:17 – "....அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்."**

என வேதவசனங்கள் தெளிவாகப் போதிக்கும்போது, ஏனோக்கு **எப்படி மரிக்காமல்** இருக்க முடியும்?

ஆம்! இந்தக் கேள்விகளுக்கான பதிலைப் பார்ப்பதற்கு முன்பதாக, ஏனோக்கைப் பற்றி பேசும் மூன்று வேதவசனங்களிலிருந்து அவரைக் குறித்து கொஞ்சம் புரிந்துகொள்வோமாக......

**1. ஆதியாகமம் 5:22–24**

**"ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம். ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்."**

ஆம்! இந்த வேத வசனத்திலிருந்து, 65 வயதில் ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், 300 ஆண்டுகளாக **"தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தார்"**, பின்னர் தேவன் அவரை அந்த இடத்திலிருந்து எடுத்துக்கொண்டார் என்று வாசிக்கிறோம்.

அடுத்த வசனத்தை நாம் வாசிக்கலாம் –

**2.எபிரெயர் 11:5**

**"விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்."**

இந்த வேத வசனத்தில், 'மரணத்தைக் காணாதபடிக்கு' தேவன் ஏனோக்கை எடுத்துக்கொண்டார் என்று கூறுகிறது, ஏனெனில் அவர் தேவனுக்குப் பிரியமானவனென்று முன்னமே சாட்சிபெற்றிருந்தார்.

இங்கே எழும் கேள்வி என்னவென்றால் – **தேவனைப் பிரியப்படுத்துவதற்கு ஏனோக்கு என்ன செய்தார்?** அந்தக் கேள்விக்கான பதிலுக்கு ஏனோக்கு பற்றிய தகவலடங்கிய கூடுதலான வேதவாக்கியமொன்று தேவைப்படுகிறது, இது வேதாகமத்தில் உள்ள ஏனோக்கு பற்றிய கடைசி வசனத்தில் காணப்படுகிறது.

அவ்வசனத்தை நாம் இப்போது வாசிக்கலாம் –

**3. யூதா 14, 15**

**"ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, .... ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்"**

ஆம்! ஆதாமிலிருந்து ஏழாவது தலைமுறையான ஏனோக்கை **ஒரு தீர்க்கதரிசி** என்றும், கர்த்தருடைய **இரண்டாம் வருகை** பற்றியும் **உலகத்தின் நியாயத்தீர்ப்பு** பற்றியும் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார் என்றும் வேத வாக்கியங்கள் கூறுகின்றன.

ஆம்! அவரே தேவனுடைய முதலாம் தீர்க்கதரிசி ஆவார்! **ஞாபகமிருக்கின்றதா** சகோதர சகோதரிகளே!

மனிதனுக்கான **தெய்வீகத் திட்டம்** குறித்தும் மற்றும் **வெளிப்படுத்தல் 4**ம் அதிகாரத்தின் **இருபத்து நான்கு மூப்பர்களை உள்ளடக்கிய இராஜ்யம்** குறித்தும் தேவனிடமிருந்து வந்த இருபத்து நான்கு தீர்க்கதரிசனங்களில் முதலாம் தீர்க்கதரிசனத்தை ஏனோக்கின் வாயிலிருந்தே தேவன் வெளிப்படுத்தினார்.

**ஆக, ஏனோக்கைக் குறித்துள்ள இந்த வேதவாக்கியத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?**

1. 300 ஆண்டுகளாக **"அவர் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தார்"** என்பதையும்,

2. மேலும் அவர் **தேவனுக்குப் பிரியமானவனென்று** முன்னமே சாட்சிபெற்றிருந்தார் என்பதையும்,

3. ....மேலும் அவர், தேவனுடைய தெய்வீகத் திட்டம் குறித்தும் மற்றும் பொல்லாத முதலாம் உலகத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டு பின்னர் இருக்கப்போகிற எதிர்கால இராஜ்யம் குறித்தும் தைரியமாக பேசிக்கொண்டிருந்த தேவனுடைய முதலாம் **தீர்க்கதரிசி** என்பதையும்.

.... நாம் கற்றுக்கொள்கிறோம்.

**"தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில்" பதத்தின் அர்த்தம் என்ன? வாருங்கள் பார்க்கலாம் –**

இதேபோன்றதொரு சாட்சியம் நோவாவைக் குறித்தும் சொல்லப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம் -

**ஆதியாகமம் 6:9**

**"நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்."**

**ஆம்! நோவாவும் "தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்"** !

இதனைப் புரிந்துகொள்ள கீழ்கண்ட வசனத்தை வாசிக்கலாம் -

**1 யோவான் 1:5–7**

**"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு, உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்கள் என்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால்,**


**சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."**

ஆம்! இது ஒளியிலே நடப்பதைக் குறிக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இங்கே "**ஒளி**" என்பது நீதியையும் சத்தியத்தையும் குறிக்கிறது. ஏனோக்கு இதைச் செய்தார் அல்லது 300 நீண்ட ஆண்டுகளாக தேவனோடு **இந்த நிலையிலே** சஞ்சரித்தார் என்று இப்போது வாசித்தோம்!
ஏனோக்கு பரிபூரணரில்லை! ஆனாலும், அவர் சரியானதைச் செய்யவும், தேவனுடன் ஐக்கியங்கொண்டிருக்கவுமே நாடினார்.
அவருக்கு விசுவாசம் இருந்தது!

வேதவசனங்களும் அதுவரை எழுதப்படாத ஒரு காலத்தில் ஏனோக்கு எவ்வாறு தேவனுடன் நெருக்கமாக வாழ்ந்தார் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம் ??

இதற்கான பதில் முதலாம் உலகின் ஆதாமினுடைய தலைமுறைகளின் அட்டவணையில் காணப்படுகிறது –

## முதலாம் உலக வம்சவரலாறு



இப்போது இந்த விளக்கப்படத்திலிருந்து இரண்டு காரியங்களைக் காண்கிறோம் மற்றும் கவனிக்கிறோம் –

1. ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையான **ஏனோக்கு பிறக்கும்போது ஆதாமுக்கு 622 வயதாகிறது.** மேலும் ஆதாம் 930 வருஷம் உயிரோடு இருந்தார்.(ஆதி. 5:5)

அப்படியென்றால் ஏனோக்கு பிறந்த பின்பும் ஆதாம்....

***930 – 622 = 308***

வருடங்கள் உயிரோடு இருந்திருக்கிறார்.

அதாவது **ஏனோக்கின்** பதிவு செய்யப்பட்ட 365 ஆண்டுகளில் **308 வயது வரை** மனுக்குலத்தின் பாட்டனான **ஆதாம் உடன் இருந்திருக்கிறார்.**

2. பதிவு செய்யப்பட்டுள்ளபடி தேவனைத் தொழுதுகொள்வது சேத்தின் மகனாகிய ஏனோஸ் பிறந்தபோது துவங்கியது –

**ஆதியாகமம் 4:26**

**"சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்."**

ஏனோசின் பிறப்பு துவக்கி ஏனோக்கின் பிறப்பு வரையிலான காலகட்டத்தை ஒருவர் மொத்தமாகக் கூட்டினால், அது 4 தலைமுறைகளை உள்ளடக்கினதாயிருக்கும்!

ஆண்டுகளின் எண்ணிக்கையின் கணக்கு பின்வருமாறு –

| | |
|---|---|
| ➤ கேனான் பிறந்தபோது ஏனோசின் வயது..... | 90 வருடங்கள் |
| ➤ மகலாலெயேல் பிறந்தபோது கேனானின் வயது... | 70 வருடங்கள் |
| ➤ யாரேத் பிறந்தபோது மகலாலெயேலின் வயது ... | 65 வருடங்கள் |
| ➤ ஏனோக்கு பிறந்தபோது யாரேத்தின் வயது.... | 162 வருடங்கள் |
| **மொத்தம்** | **387 வருடங்கள்** |

ஆகவே, ஏனோசின் பிறப்பு துவக்கி ஏனோக்கின் பிறப்பு வரையிலான காலம் 387 ஆண்டுகள் என்பதைக் காண்கிறோம்.

இவ்வாறு ஏனோக்கின் பிறப்புக்கு 387 ஆண்டுகளுக்கு முன்பே தேவனைத் தொழுதுகொள்வது முதலாம் உலகில் நடந்து கொண்டிருந்தது.

**இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?**

இதுவே எவ்வாறு ஏனோக்கு தேவனைக் குறித்து கற்றுக்கொண்டு, இவ்வண்ணம் அவருடன் '**சஞ்சரிக்க**' நாடினார் என்பதன் அடிப்படையாகும். முதலாவதாக, **ஏனோக்கு ஒரு சிறிய குழந்தையாக** தொழுகையில் பங்கெடுத்துக்கொண்டதின் மூலம் தேவனைக் குறித்து அறிந்திருக்க வேண்டும், அங்கு **மனுக்குலத்தின் பாட்டனான ஆதாம் ஏதேன் குறித்த அனுபவங்களையும்**, கர்த்தராகிய தேவனோடு கழித்த தருணங்களையும் குறித்து அவ்வப்போது சாட்சியமளித்திருப்பார் என்பதை நம்மால் நன்கு கற்பனைசெய்து பார்க்க முடிகின்றது.

மேலும், **சிருஷ்டிப்பு** பற்றியும், **ஏதேனின் பரிபூரணம்** மற்றும் சமாதானமான பேரின்பம் பற்றியும், **வீழ்ச்சியின்** பயங்கரமான வஞ்சனை பற்றியும், மீட்பராக இருக்கவிருந்த '**ஸ்திரீயின் வித்து**'னுடைய தீர்க்கதரிசனம் பற்றியும் பகரப்பட்ட சாட்சிகளால், இளம்பிராயத்திலிருந்த ஏனோக்கு வசீகரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நம்மால் நன்கு கற்பனைசெய்து பார்க்க முடிகின்றது.



ஆ! இந்தச் சாட்சிகளையெல்லாம் ஆதாமிடமிருந்து கேட்க இளம் ஏனோக்கு நாடியிருப்பார் என்பதையும் **ஆதாமின் வாயிலிருந்து அந்தச் சாட்சிகளை மீண்டும் மீண்டும் கேட்பதில் சோர்வடைந்திருக்க மாட்டார்** என்பதையும் நம்மால் நன்கு கற்பனைசெய்து பார்க்க முடிகின்றது!

மேலும், ஆம்! **தொப்புள் இல்லாத** ஆதாமின் வயிற்றைக் கண்டு அவர் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்!!

ஆ! அவர்கள் பல அதிசய தருணங்களை ஒன்றாகக் கழித்திருக்க வேண்டும் – ஒரு வயதான மனிதரும் ஓர் இளைஞனும் உயிரூட்டப்பட்ட உரையாடலில் ஒன்றாகத் நெருங்கியிருந்து, ஏதேன் தோட்டத்தின் வெளிப்புற எல்லையைச் சுற்றி ஒன்றாக கூட நடந்தும் இருக்கலாம்!

இப்படியாக ஏனோக்கு உன்னதமான தேவனுடைய ஊழியராகவும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார். ஏனோக்குடனான ஐக்கியத்தில் தேவன் என்ன செய்திருப்பார்?

ஆம்! அவர் தம்முடைய **யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தைக்** குறித்து – **இராஜ்யத்தின் சுவிசேஷத்தைக்** குறித்து – **ஏனோக்கிற்கு** வெளிப்படுத்தியிருப்பார். இது கீழே உறுதிப்படுத்தப்படுவதாக நாம் காண்கிறோம் –

**ஆமோஸ் 3:7**

**"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்."**

மற்றும்....

**எரேமியா 33:3**

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்."**

ஏனோக்கு முதலாம் உலகத்தில் ஜலப்பிரளயத்திற்கு முன்பு வாழ்ந்தபோதும், இரண்டாம் வருகை மற்றும் உலகத்தின் வருங்கால நியாயத்தீர்ப்பு குறித்த ஒரு மேம்பட்ட மற்றும் ஆழமான காரியத்தைப்பற்றி எவ்வாறு தீர்க்கதரிசனமுரைத்தார் என்பதற்கு காரணம் இதுதான்!! ஒரு பொல்லாத சந்ததியினரிடையே சத்தியத்துக்காகவும் நீதிக்காகவும் நின்ற ஏனோக்கின் தைரியத்தினிமித்தம் தேவன் அவர் மேல் பிரியமாயிருந்தார். இதுப்பற்றி கீழே பதிவு செய்யப்பட்டுள்ளது –

**ஆதியாகமம் 6:11, 12**

**“பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.”**

**ஆம்! இங்கே சிறந்த உதாரணமுடைய முற்பிதா ஒருவர் நமக்காக உள்ளார்!!**

ஏதோவொரு நோக்கத்திற்காகத்தான் ஏனோக்கிடம் தேவன் தம்முடைய மாபெரும் தெய்வீகத் திட்டத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்!

அது என்னவென்று பிற்பாடு இந்த ஆய்வில் பார்க்கலாம்.

இப்போது நாம் ஏனோக்கிடமும், அவரைக் குறித்து பின்வருமாறு கூறப்பட்டதற்கும் வரலாம் –

**“மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்”.**

**அவர் எப்படி மரிக்காமல் இருந்திருக்க முடியும்?**

மரணம் என்பது “**பாவத்தின் சம்பளம்**” (ரோமர் 6:23) என்று வேத வசனங்களில் நாம் காண்கிறோம் மேலும், ஆதாமின் எல்லா பிள்ளைகளும் இதனைச் சுதந்தரித்து அதே மரணதண்டனையின்கீழ் வந்துள்ளனர், இதைப்பற்றி நாம் காணலாம் –

**ரோமர் 5:12**

**“இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.”**

உண்மையில், முழு மனுக்குல சந்ததியும் ஆதிப்பெற்றோர்களான ஆதாம் மற்றும் ஏவாளிடமிருந்து பெறப்பட்ட இந்த மரண நிலைக்குள்ளாக உருவாக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி தாவீதின் வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது –

**சங்கீதம் 51:5**

**“இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.”**

ஆம்! இந்தப் பாவம் ஒரு மனிதனுக்குள் **எப்போது, எப்படி** நுழைகிறது என்பதை இந்த வேதவசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியின் வல்லமையின்கீழ் பாஷையின் அற்புதமான பயன்பாட்டில் நாம் பின்வரும் வார்த்தைகளைக் காண்கிறோம் –

- **"நான் துர்க்குணத்தில் உருவானேன்"**
- **"...என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்."**

ஆ! இந்த வார்த்தைகள் எவ்வளவு சுலபமாக தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, பொருள்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அதன் அர்த்தம் ஆழமானதும் மிகவும் பிரகாசமானதுமாகும்!!

"**துர்க்குணத்தில் உருவானேன்**" என்பது பெற்றோர்களாகிய ஓர் ஆணும் பெண்ணும் சம்பந்தப்பட்ட கருத்தரித்தல் செயல்முறையைப் பற்றியும், இவர்கள் இருவரும் எவ்வாறு **அபூரணமாக** மற்றும் **துர்க்குணம்** அல்லது **பாவத்தின் நிலையில்** இருந்தார்கள் என்பது பற்றியும் பேசுகிறது.

பின்னர் "**என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்**" என்பது, இந்தப் பாவமானது கருத்தரிக்கப்பட்ட அந்தக் காலக்கட்டத்திலிருந்தும், மேலும் **தொடர்ந்து தாயின் கர்ப்பத்தில் 9 மாத கர்ப்பகாலத்தின் போதும்** இருந்ததைப் பற்றி இது பேசுகிறது!

பல பச்சிளங்குழந்தைகள் பிறந்த சில நாட்கள், வாரங்கள் மற்றும் மாதங்களுக்குள் எதனால் இறக்கின்றன என்பதற்கான விளக்கம் இதுதான்.

**ஆனால் இங்கே மறைக்கப்பட்ட மர்மமொன்று உள்ளது!**

**பிரசங்கி 7:1** ல் நாம் வாசிக்கின்றோம்–

**"பரிமளதைலத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியும், ஒருவனுடைய ஜநநநாளைப்பார்க்கிலும் மரணநாளும் நல்லது."**

**ஆ! வேத வசனம் விசித்திரமாகத் தெரிகிறது!!**

**எவ்வாறு ஒருவருடைய பிறந்த நாளை விட அவருடைய மரண நாள் சிறப்பாக இருக்க முடியும்?**

சரி, உண்மையில் இந்த வேத வசனத்திற்கு என்ன அர்த்தம், அது நமக்கு என்ன சொல்கிறது என்பதைப் புரிந்து கொள்ள, அதே பிரசங்கி புத்தகத்தில் உள்ள மற்றொரு வேத வசனத்தை நாம் வாசிக்கலாம் –

**பிரசங்கி 4:2, 3**

**"ஆதலால் இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப்பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களையே பாக்கியவான்கள் என்றேன். இவ்விரு திறத்தாருடைய நிலைமையைப்பார்க்கிலும் இன்னும் பிறவாதவனுடைய நிலைமையே வாசி; அவன் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் துர்ச்செய்கைகளைக் காணவில்லையே."**

**ஆ! இந்த வசனம் இன்னும் விசித்திரமாகத் தெரிகிறது!**

ஆனால் ஞானியான பிரசங்கி '**உயிருள்ளவர்கள்**', '**மரித்தவர்கள்**' மற்றும் '**இன்னும் பிறவாதவன்**' பற்றி பேசுவதைக் கவனிக்கவும். இந்த உலகில் ஒருபோதும் **பிறவாததே** ஆகச் சிறந்த மற்றும் **ஆசீர்வதிக்கப்பட்ட நிலை** என்று அவர் நமக்குச் சொல்கிறார்!

**அடுத்த சிறந்த நிலைமை** என்னவென்றால், உயிரோடிருந்து இப்போது மரித்திருப்பதாகும். அவர் நமக்குச் சொல்லும் **மிக மோசமான நிலை** என்னவென்றால், உயிருடன் இருப்பது அல்லது ஜீவனுடன் இருப்பதாகும்.


**இதை ஏன் அவர் சொல்கிறார்?**

ஏனென்றால் **பிறந்த** தருணத்தில் ஒருவர் இந்த **மரண தண்டனை** மற்றும் **கண்டனத்தின்கீழ்** உள்ள ஒரு உலகத்திற்குள் நுழைகிறார். மேலும் இந்தத் தண்டனையானது அந்த நபரின் **மரணத்தின் தருணத்தில் முடிக்கப்பட்டு** நிறைவேற்றப்படுகிறது. ஆகவே தற்போதுள்ள **ஜீவ நிலைமை** என்று அழைக்கப்படுவதெல்லாம், உண்மையில் **மரித்த** (அ) **மரித்துக்கொண்டிருக்கும்** நிலைதான்!

**இத்துயரமான, வேதனையான மற்றும் சீரழிவான நிலைமை துவங்குவதை விடவும் முடிவதே சிறந்தது!**

**இவ்வாறு இச்சிந்தனையை மனதில் கொண்டுதான் ஞானியான பிரசங்கி பின்வருமாறு கூறுகிறார்: பிரசங்கி 7:1 – "ஜநநநாளைப்பார்க்கிலும் மரணநாளும் நல்லது".**

ஆம்! யோபு அவர் அனுபவித்த துன்பங்களின் போது அவர் வெளிப்படுத்திய கருத்தும் இதேதான் –



**யோபு 14:13**

**“நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்!”**

**அதைக் கவனித்தீர்களா?**

“பாதாளம்” என்பது **விரும்பத்தக்கது** மற்றும் **ஓய்வுக்கான** இடமும் கூட !!

ஆகவே, கல்லறைகள் மீதான பாரம்பரிய **R.I.P** (சமாதானத்தில் இளைப்பாறுங்கள்) மிகவும் குறிப்பிடத்தக்க பொருளைக் கொண்டுள்ளது, இது பெரும்பான்மையான மனிதர்களால் புரிந்து கொள்ளப்படவில்லை!

ஆகவே, உண்மையில் முழு உலகமும் மரித்த நிலையில் இருப்பதைக் காணலாம், மேலும் பின்வரும் அந்த முக்கியமான வார்த்தைகளை எஜமான் பேசியபோது வெளிப்படுத்தியதும் இதேதான் –

**லூக்கா 9:60**

**“அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்.”**

ஆம்! **மரித்தோரை அடக்கம் செய்யும்** நேரத்தில் அடக்கம் ’**மரித்தோரால்**’ செய்யப்படுகிறது என்பதை இங்கே கர்த்தர் தெளிவாக விளக்குகிறார்!

**ஆகவே, ஆதாமின் முழு சந்ததியும் “மரணம்” சுதந்தரிக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் காண்கிறோம், மேலும் உயிரோடிருப்பவர்கள் “ஜீவித்துக்கொண்டிருக்கும் மரித்தவர்கள்” என்றும், கல்லறைகளில் இருப்பவர்கள் “மரித்த மரித்தவர்கள்” என்றும் கருதப்படுகிறார்கள்.**



இந்த மரண தண்டனை பிறப்பிலேயே **தொடங்கி** கல்லறையில் **முடிகிறது.** உண்மையில் இது குறித்து தேவன் நமக்கு ஓர் **"அடையாளத்தைக்"** கொடுத்திருக்கிறார். எல்லா குழந்தைகளும் பிறக்கும்போது அழுகிறார்கள்! இன்றுவரை யாரும் சிரித்தபடி பிறப்பதில்லை. ஒருவர் எப்போது அழுவார்? சோகத்திலும் துக்கத்திலும் துன்பத்திலும் இருக்கும்போது தானே ஒருவர் அழுகிறார்.

**இந்தத் தற்போதைய உலகில் நுழையும்போது உள்ள மனப்பான்மை எவ்வளவு பொருத்தமானதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது!**

ஆகவே வேத வசனத்தின் அர்த்தத்தை **1 கொரிந்தியர் 15:22**ல் நாம் காண்கிறோம் –

**"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல......"**

இந்த **'எல்லாரும்'** என்பது முழு உலகமும் இந்த **'மரண'** நிலையில் பிறக்கப்படுவதையோ அல்லது உருவாக்கப்படுவதையோ குறிக்கிறது. ஏனோக்கும் இதே **'மரண'** நிலையில் தான் பிறந்தார்.

**➤ எனவே ஏனோக்கும் கூட "ஆதாமுக்குள்" மரித்தார்**

அப்படியானால், **எபிரெயர் 11: 5 – "அவர் மரணத்தைக் காணாதபடிக்கு"** என்ற வேத வசனம் எந்த வகையில் நிறைவேறும்?

இந்த **"மரணத்தைக் காணாதபடிக்கு"** என்பது '**மரித்த மரித்தவர்களின்**' நிலையை அல்லது வேறுவிதமாகக் கூறினால் கல்லறைக்குச் செல்லும் நிலையை குறிக்கிறது என்பது இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு ஏனோக்கும் ஆதாமின் மரணதண்டனையின்கீழ் அவர் மரித்தபோது **"ஆதாமுக்குள்"** மரித்தார். அவர் மரண நிலையில் பிறந்தபோதும், அவர் **உடனே மரணத்தைக் காணவில்லை**, அவர் **கல்லறைக்குச்**

**செல்லவுமில்லை** செல்லவும் மாட்டார். ஏனென்றால் அவரை உயிரோடு வைத்திருப்பதில் தேவனுக்கு ஒரு திட்டமும் நோக்கமும் இருக்கிறது! அந்தக் காரணத்தினால்தான் தேவன் அவரை '**எடுத்துக்கொண்டார்,**' '**வேறொரு இடத்திற்கு மாற்றினார்**'.

ஆகவே, **"அவர் மரணத்தைக் காணாதபடிக்கு"** என்பதன் அர்த்தத்தை நாம் சரியாகப் புரிந்துகொண்டோமேயானால், **ஏனோக்கும் ஜலப்பிரளயத்திலிருந்து தப்பித்ததாக அர்த்தமாகும்,** ஆனால் நோவாவும் மற்ற ஏழு பேரும் மட்டுமே காப்பாற்றப்பட்டதாக பின்வரும் வேதவாக்கியம் சாட்சியமளிக்கிறதே –



**2 பேதுரு 2:5**

**"பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி;..."**

**இது ஏன்?**

ஏனென்றால் **2 பேதுரு 2: 5**ல் உள்ள வேத வசனம் அந்த உலகத்தையும், அதனோடு தொடர்புடைய நோவாவையும் அவருடைய குடும்பத்தினரையும் பற்றி பேசுகிறது. ஆனால் ஏனோக்கோ ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் **அந்தக் குழுவிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தார்.**

உண்மையில் ஏனோக்கை அக்குழுவிடமிருந்தும், சூழலிலிருந்தும்

ஜலப்பிரளயத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே கர்த்தர் அவரை எடுத்துக் கொண்டார். அது எத்தனை ஆண்டுகள் என்பதை இப்போது நாம் கணக்கிடலாம் –

| | |
|---|---|
| சேத் பிறந்தபோது ஆதாமின் வயது.... | – 130 வருடங்கள் |
| ஏனோஸ் பிறந்தபோது சேத்தின் வயது.... | – 105 வருடங்கள் |
| கேனான் பிறந்தபோது ஏனோஸின் வயது.... | – 90 வருடங்கள் |
| மகலாலெயேல் பிறந்தபோது கேனானின் வயது... | – 70 வருடங்கள் |
| யாரேத் பிறந்தபோது மகலாலெயேலின் வயது ... | – 65 வருடங்கள் |
| ஏனோக்கு பிறந்தபோது யாரேத்தின் வயது.... | – 162 வருடங்கள் |
| ஏனோக்கு **எடுத்துக்கொள்ளப்பட்டபோது** அவருடைய வயது.... | – 365 வருடங்கள் |
| **மொத்தம்** | **987 வருடங்கள்** |

ஆம், முதலாம் உலகத்தில் 987 ஆண்டுகளுக்குப் பிறகு ஏனோக்கு **'எடுத்துக்கொள்ளப்பட்டார்'.** முதலாம் உலகம் 1656 ஆண்டுகள் இருந்தது என்பதை நாம் அறிவோம்.

***1656 – 987 = 669*** **வருடங்கள்**

எனவே, ஏனோக்கு ஜலப்பிரளயத்திற்கு 669 ஆண்டுகளுக்கு முன்பே **'எடுத்துக்கொள்ளப்பட்டார்'** அல்லது **'வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டார்'**. இவ்வாறு, அவர் கர்த்தருடைய பராமரிப்பில் இருந்தார். தேவன் அவரை பூமியில் எந்த இடத்தில் வைத்திருந்தாலும் அவருடைய **ஒவ்வொரு தேவைக்கும் தேவன் உதவியிருப்பார்.** ஜலப்பிரளயம் வந்தபோது, தன்னையும் குடும்பத்தினரையும் காப்பாற்றுவதற்காக பேழையைக் கட்டும்படி நோவாவுக்கு அறிவுறுத்தியது போலவே தேவன் ஏனோக்கிற்கும் **விசேஷித்த ஏற்பாடுகளைச்** செய்திருக்க வேண்டும்!

நிச்சயமாக, ஏனோக்கை ஜலப்பிரளயத்தில் மரிக்கச்செய்வதற்காக மாத்திரம், "**மரணத்தைக் காணாதபடிக்கு**" அவரை தேவன் எடுத்துக்கொள்ளவில்லை !!!

அடுத்ததாக,

**ஏனோக்கு கல்லறைக்குள் செல்லாமல் இருப்பது அநீதியா? என்கிற கேள்விக்கு இப்போது நாம் வரலாம்........**

**அனைவரும் கல்லறைக்குள் செல்ல வேண்டியது அவசியமா?**

**'மகா உபத்திரவத்தின் காலத்திற்கும்' (மத்தேயு 24: 21-22)** மற்றும் இரண்டாம் உலகத்தின் முடிவுக்கும் மிகவும் சமீபமாயிருக்கும் ஒரு தலைமுறையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.



**மாம்சமான அனைவரும் அழிக்கப்பட்டு, ஓர் ஆத்துமாகூட மீந்திருக்காதென்று வேதவாக்கியங்கள் நமக்குப் போதிக்கின்றனவா?**



இல்லை, அதற்கு மாறாக, இரண்டாம் உலகத்தின் இறுதியான தருணங்கள் மற்றும் முடிவில் இருந்து **தப்பிப்பிழைத்த பலர்**, பின்னர் இஸ்ரயேலில் இராஜ்யத்தின் **'கண்ணுக்குத் தெரிகின்ற'** பாகத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்றே வேதவசனங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இதுகுறித்து பின்வரும் வசனத்தில் காணலாம் –

**சகரியா 14:16**

**"பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்."**

ஆம்! **இவர்கள் புறஜாதியார்** என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்!

**அப்படியானால், யூதர்கள் என்ன ஆவார்கள்?**

அதைக் குறித்து வாசிக்கலாம் –

**சகரியா 12:8,9**

**"அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார்; அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான்; தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாக தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள். அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்."**

ஆம்! இஸ்ரயேலில் உள்ள **பல யூதர்கள்** அந்த இறுதி மோதலில் தப்பிப்பிழைப்பார்கள் என்பதாகவும், தேவனுடைய இராஜ்யம் அதன் புலப்படும்

கட்டத்தில், நிறுவப்படும் முதல் தேசமாக இஸ்ரயேல் இருக்கும் என்பதாகவும் நாம் காண்கிறோம்.

**ஆகவே, அக்காலக்கட்டத்தில், யூதர்களும் புறஜாதியாரும் பெருமளவில் கல்லறைக்குள் செல்லமாட்டார்கள்.**

கர்த்தர் பின்வரும் அந்த வார்த்தைகளை **வெளிப்படுத்தல் 1:18** –இல் பேசியபோது அவர் சொன்னதின் அர்த்தமும் இதுதான்....

**"....சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்."**

இங்கே இந்த வேத வசனத்தில் "**பாதாளம்**" என்பது "**மரித்த மரித்தவர்கள்**"ஐக் குறிக்கிறது, "**மரணம்**" என்பது "**ஜீவிக்கும் மரித்தவர்களை**" குறிக்கிறது, மேலும் கர்த்தருடைய இராஜ்யத்தின் நியாயத்தீர்ப்பு, மறுசீரமைப்பு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை **முதலில்** "**ஜீவிக்கும் மரித்தவர்களுடன்**" **துவங்கி** பின்னர் "**மரித்த மரித்தவர்களுக்கு**" கடந்துசெல்லும்.

**எசேக்கியேல் 47**ம் அதிகாரத்தில் நாம் காண்கிறபடி, உயரத்தில் சீராக வளர்ந்து வரும் "**தண்ணீர்**" என்பது இஸ்ரயேலில் இராஜ்ய ஏற்பாடுகளுக்கு படிப்படியாக வரும் **(ஏசாயா 2: 3)** ஜீவித்துக்கொண்டிருக்கும் தேசங்கள் அல்லது "**ஜீவித்துக்கொண்டிருக்கும் மரித்தவர்கள்**" மீதான இராஜ்ய வேலைகளை அடையாளப்படுத்துகிறது, பின்னர் நதியானது "**கடலில்**' விழுகிறது **(எசேக்கியேல் 47: 8)** இது சவக்கடல் ஆகும், மேலும் ஜீவனைப் பெறத் தொடங்கும் "**மரித்த மரித்தவர்களைக்**" குறிக்கிறது, இதைப்பற்றி நாம் வாசிக்கலாம் –

**எசேக்கியேல் 47:9**

**"சம்பவிப்பது என்னவென்றால், இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவபிராணிகள் யாவும் பிழைக்கும்; இந்தத் தண்ணீர் அங்கே வந்தபடியினால் வெகு ஏராளமான மச்சங்களும் உண்டாயிருக்கும்; இந்த நதிபோகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்."**

இந்தப் படம் பின்வருவதிலும் குறிப்பிடப்படுகிறது –

**சகரியா 14:8**

**"அந்நாளிலே ஜீவத்தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்."**

இங்கே '**ஜீவத்தண்ணீர்கள்**' இரண்டு திசைகளுக்குச் செல்வதைக் காண்கிறோம் –
"**கிழக்குச் சமுத்திரம்**" (NIV-யில் '**கிழக்கு கடல்**') இது **சவக்கடல்** ஆகும்
மற்றும்
"**மேற்குச் சமுத்திரம்**" (NIV-யில் '**மேற்கு கடல்**') இது **மத்திய தரைக்கடல்** ஆகும்
இவை மேற்சொன்ன அதே விஷயத்தை மீண்டும் வெளிப்படுத்துகின்றன –
"**மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்கள்**" –
'**ஜீவிக்கும் மரித்தவர்கள்**' (**மத்திய தரைக்கடல்**) மற்றும் '**மரித்த மரித்தவர்கள்**' (**சவக்கடல்**). ஜீவன் முதலில் '**ஜீவிக்கும் மரித்தவர்களுக்கு**' வரும் பின்னர் '**மரித்த மரித்தவர்களுக்கும்**' வரும்.

உண்மையில் **வெளிப்படுத்தல் 20:12 – "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும்**" என்று உள்ள குறிப்பானது, தங்களுடைய நியாயத்தீர்ப்பு மற்றும் '**மரணத்திற்கான**' முதலாம் திறவுகோலைத் திறப்பதின் சித்திரத்திலிருக்கும் சகல தேசங்களின் 'ஜீவித்துக்கொண்டிருக்கும் மரித்தோரைக்' குறிக்கின்றது.

ஆகவே, தற்போது வாழும் உலகில் பலர் பாதாளத்திற்குள் செல்லமாட்டார்கள் என்பதும், அது ஏனோக்குக்கும் பொருந்தும் என்பதும் இப்போது நமக்குத் தெளிவாகி இருக்க வேண்டும், அவரைப்பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது –

**"மரணத்தைக் காணாதபடிக்கு."**

ஏனோக்கு இன்னும் உயிருடன் இருப்பதற்கு **ஆட்சேபனை** தெரிவிக்கும் கடைசி கருத்து **ஆதியாகமம் 2: 17**–ன் வேதப்பகுதியாகும் –

**"…..அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்."**

**சரி, இந்த வேத வசனத்தைப் பற்றி என்ன சொல்லலாம்?**

இந்த வேதப்பகுதியில் ஆதாம் மற்றும் ஏவாளைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட மற்றும் தனிப்பட்ட குறிப்பு உள்ளது. **ஆதியாகமம் 3: 19**–ல் உள்ள மற்ற வசனத்திலும் அது காணப்படுகிறது. அதுகுறித்து பின்வரும் வசனப்பகுதியில் நாம் வாசிக்கலாம் –

**"….நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்."**

இது பொதுவாக ஆதாமின் பிள்ளைகளுக்குப் பொருந்தும், மேலும் மண்ணுக்குத் திரும்பாதவர்களுக்கு விதிவிலக்குகள் இருப்பதைப் போலவே, ஏனோக்கின்

விஷயத்திலும் 1000 ஆண்டுகள் என்கிற வரையறைக்குட்பட்ட **ஆயுட்காலத்தோடும்கூட** விதிவிலக்கு இருக்கக்கூடும்.

R-3377 முடிவிலும், R-3378 இன் தொடக்கத்திலும் **சகோ.ரசல்** அவர்கள் பின்வரும் வார்த்தைகளைக் கூறியிருக்கின்றார் –

தந்தை ஆதாமுக்கு தண்டனை வழங்கப்பட்ட பின்னர் அவர் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார், ஆனால் குறிப்பிட்ட அவருக்குரிய தண்டனையின் கீழ் அவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்திருக்க முடியாது; ஏனென்றால், "நீ புசிக்கும் நாளில் நீ சாகவே சாவாய்" என்று வசனம் கூறுகின்றது. மேலும் "கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் ஆண்டுகள்" என்பதால் (2 பேதுரு 3: 8) அவருடைய மரணம் அந்த நாளுக்குள் நடக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது . ஆனால் ஏனோக்கு மற்றும் எலியா ஆகிய நிழல்களை உருவாக்குவதற்காய் தேவன் அந்த நாளை அடைக்காது விட்டுவிட்டார். ஆகவே அவர்களையும் மனித குடும்பத்தின் எஞ்சியவர்களையும் பொறுத்தவரையில், தண்டனையை நிறைவேற்றுவதற்கான எந்தக் கால அவகாசமும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகையால், அது அப்படியாய் இருக்க தேவனுக்கு பிரியமானதாய் இருந்திருக்குமேயானால், அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, மரண தண்டனையின் கீழாகவே, மரிக்காமல் தொடர்ந்து வாழ்ந்திருக்கக்கூடும்.

**ஏனோக்கை உயிரோடு வைத்திருப்பதற்கான தேவனுடைய நோக்கத்தைப் பற்றி நாம் பார்க்க பார்க்க, ஏனோக்கினை இந்த விசேஷித்த விதிவிலக்குக்கு உட்படுத்தின காரணங்கள் இப்போது வெளிப்படும்!!**


இந்த விஷயத்தைப் பற்றி நாம் மேலும் பார்ப்பதற்கு முன், இப்போது வேதாகமத்தில் உள்ள மற்றொரு மர்மமான கதாபாத்திரத்தை நாம் பார்க்க வேண்டும், ஒரு வகையில் ஏனோக்கைப் போன்றவர்தான், ஆனால் இரண்டாம் உலகில் காணப்பட்டவர். அவரைப்பற்றி நாம் வாசிக்கலாம் –

## எபிரெயர் 7:1-7

**இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன்**

**எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்; இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம். இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான். இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான். லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்து வந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளைபெற்றிருக்கிறார்கள். ஆகிலும், அவர்களுடைய வம்ச வரிசையில் வராதவனாகிய இவன் ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான். சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான், அதற்குச் சந்தேகமில்லை.”**

ஆம்! நாம் **மெல்கிசேதேக்கு** பற்றி தான் பேசுகிறோம்!



**யார் இந்த மெல்கிசேதேக்கு?**

ஆ! அவர் சாலேமின் இராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தார் என நாம் வாசிக்கிறோம் (**ஆதியாகமம் 14:18**).

அவரைப் பற்றி பின்வரும் கருத்துகளைக் குறிப்பிடுகிறோம் –

ஆபிரகாம் அவரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, அவருக்கு தசமபாகம் கொடுத்தார், வாசிக்கலாம் இதைப்பற்றி –



**ஆதியாகமம் 14:18-20**

**“அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான**

**தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்."**

- மெல்கிசேதேக்கு என்பதன் அர்த்தம் ...."**நீதியின் இராஜா**"ஆகும். **(எபிரெயர் 7:2)**

- சாலேமின் ராஜா என்பதன் அர்த்தம்.... "**சமாதானத்தின் ராஜா**"ஆகும். (சாலேம் என்றால் சமாதானம்) **எபிரெயர் 7:2**


- இவர் **தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவராய் இருந்தார்** "**இவன் நாட்களின் துவக்கமும்**" (பிறந்த நாள்) "**ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல்**" (மரண நாள்) **நித்திய ஆசாரியனாகிய தேவனுடைய குமாரனுக்கு ஒரு நிழலாய் –** இருந்தார்.

- அவர் **அழியாத ஜீவன்** என்னும் கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தினுடைய அடிப்படையின் ஒரு நிழலாயுமிருக்கிறார் **(எபிரெயர் 7:16)**

**யார் இந்த மெல்கிசேதேக்கு?**

**இவர் எப்படி 'விசுவாசத்தின் தகப்பனான' ஆபிரகாமை விட பெரியவராக இருக்க முடியும்?** (எபிரெயர் 7:7)

மெல்கிசேதேக்கு "ஹிக்சோஸ் – **Hyksos**" அல்லது ஆட்டிடைய இராஜாக்கள் என்று அழைக்கப்படும் இராஜாக்களின் **சந்ததியில்** வந்தார். இவர்கள் சமாதானமான இராஜாக்கள், இவர்களைப்பற்றி எகிப்திய பதிவுகள் என்ன வெளிப்படுத்துகின்றன என்றால், இவர்கள் போரில்லாமல் எகிப்துக்குள் பிரவேசித்து, அவர்களின் வல்லமையால் மக்களை அடக்கி, உள்ளூர் ஆட்சியாளர்களை தங்கள் கைகளில் வைத்துக்கொண்டனர், பின்னர் அவர்களுடைய தேவர்களின் கோவில்களை அழித்துவிட்டனர். இந்த விசித்திரமான இராஜாக்களின் வம்சத்தில்தான் மெல்கிசேதேக்கு வந்தார் மேலும் இவரே **கி.மு. 2170** ஆண்டில் **'கீசாவின் மகா பிரமிடை'** கட்டியதாகவும் நம்பப்படுகிறது. (வேதாகமப் பாடங்கள் – **தொகுதி 3** – பக்கம் 419-420 – ஐக் காணவும்)





இது **தெய்வீக மேற்பார்வையால்** மட்டுமே கட்டப்பட்டிருக்கக்கூடிய ஒரு கட்டிடம், ஏனெனில் அதன் அனைத்து அம்சங்களும் கட்டிடக்கலைகளும் விவரங்களும் மனித திறன்களுக்கு அப்பாற்பட்டவை என்பது வேத மாணவர்களுக்கும் "**மகா பிரமிடு**" பற்றி அறிந்தவர்களுக்கும் மிகவும் தெளிவாக உள்ளது,.

**மெல்கிசேதேக்கின் அடையாளம் குறித்த பல ஊகங்கள் இருந்துள்ளன!**

சிலர், அவர் நோவாவின் இரண்டாவது குமாரனாகிய முற்பிதாவான **சேமாக** இருக்கலாம் என்கின்றனர். ஆனால் சேமைப் பற்றி விசேஷமான அல்லது அசாதாரணமான எந்தவொரு காரியமும் வேதாகமத்தில் அதிகம் பேசப்படவில்லை. இன்னும் சிலர் அவர் **கர்த்தராகிய இயேசுவாக** இருக்கலாம் என்று கூறுகிறார்கள்! ஆனால் இதுவும் ஆதாரமற்றது. ஏனெனில் கர்த்தர் நிச்சயமாக தாமே தமக்கான ஒரு நிழலாகவோ அல்லது படமாகவோ இருக்க முடியாது!

**எனவே... உண்மையில் யார் இந்த மெல்கிசேதேக்கு? நாம் கண்டுபிடிக்கலாமா?**

சரி, மெல்கிசேதேக்கின் அடையாளத்தைக் கண்டறிய முயற்சிப்பதில், தேடலின் சிறந்த முறை யாதெனில், இந்த மர்மமான இராஜாவைப் பற்றிய தகவல்களாக வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள எல்லாவற்றையும் செய்து நிறைவேற்றிய ஒருவரைக் கண்டுபிடிப்பதாகும்.

இவ்வாறு நம்மிடம் உள்ள தகவல்களுடன் ஆரம்பிக்கலாம்!

## தகவல் # 1

**"இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்;......" (எபிரெயர் 7:1-2)**

ஆ! இந்த வசனத்தில் நாம் படித்த மிகவும் **அதிர்ச்சியூட்டும்** விஷயம் இதுவாகும்!

**யார் ஆபிரகாமைப்பார்க்கிலும் பெரியவராய் இருந்திருக்கக்கூடும்?**

அது வயதுக்கு ஏற்ப, அவருக்கு முன் நீதிமான்களாக இருந்தவர்களால் மட்டுமே அவ்வாறு இருந்திருக்க முடியும். ஆபிரகாமுக்கு முன்பு 3 பேர் மாத்திரம் நீதிமான்களாக இருந்துள்ளனர் என்பதை வேதவாக்கியங்களிலிருந்து நாம் அறிவோம் – அவர்கள் – **ஆபேல்** – **ஏனோக்கு** மற்றும் **நோவா** என்பவர்களே!

- மெல்கிசேதேக்கு **ஆபேலாக இருந்திருக்க முடியாது** .... **(ஆதி. 12:4).**
- அவர் நோவாவாகவும் இருந்திருக்க முடியாது ... ஏனென்றால் ஆபிரகாம் பிறப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பே நோவா மரித்துவிட்டார்!

{காலக்கணக்கீட்டின் 427 ஆண்டுகள் கொண்ட இரண்டாம் பகுதியின் முடிவில்(அதாவது ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டபோது), ஆபிரகாம் 75 வயதுடையவராக இருந்தார்**(ஆதி. 12:4)**. ஜலப்பிரளயம் ஏற்பட்ட பின்னர் (அந்த 427ஆண்டுகளில்) நோவா 350 ஆண்டுகள் வாழ்ந்தார்**(ஆதி. 9:29)** }

இவ்வாறு கணித்திடும்போது நமக்குப் பின்வரும் கணக்கீடு கிடைக்கின்றன –

| | |
|---|---|
| ஜலப்பிரளயத்திலிருந்து 'வாக்குத்தத்தம்' கிடைக்கப்பட்ட வரையிலான மொத்த ஆண்டுகள்.... | 427 வருடங்கள் |
| | (—) |
| அந்தக் காலப்பகுதியில் நோவா மரிப்பதற்கு முன்பு அவர் வாழ்ந்த மொத்த ஆண்டுகள்..... | 350 வருடங்கள் |
| **மீதமிருக்கும் வருடங்களின் எண்ணிக்கை** | **77 வருடங்கள்** |

ஆகவே காலக்கணக்கீட்டின் இரண்டாம் பகுதியின் முடிவில் ஆபிரகாம் 75 வயதாக

இருந்திருப்பாரானால் ஆபிரகாம் பிறப்பதற்கு **இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே** நோவா மரித்துவிட்டார் என்று அர்த்தம்.

**எனவே ஏனோக்கு மாத்திரமே மெல்கிசேதேக்காக இருந்திருக்க முடியும்!**

மெல்கிசேதேக்கின் படத்திற்கு ஏனோக்கு சரியாக பொருந்துகிறாரா என்று இப்போது பார்ப்போம்.

எடுத்துக்கொள்ளப்படுவதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்பே ஏனோக்கு எவ்வாறு **'தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தார்'** என்பதை ஏற்கனவே வாசித்தவர்களாய், அவர் தேவனுடன் இணக்கமாக இருந்த நிலையையும், **வெளிச்சமும் நீதியும்** அவரை தேவனுடைய ஆசாரியராகவும், ஆபிரகாமிடமிருந்து **தசமபாகம் பெற தகுதியுடையவராகவும்** ஆக்கியதையும் நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது. தவிர, அவர் அந்த நேரத்தில் ஆபிரகாமை விட வயதானவராகவும் பெரியவராகவும் இருந்ததால், **ஆபிரகாமை ஆசீர்வதிக்கவும் அவர் தகுதியானவராக** இருந்தார்!

## தகவல் # 2

**"இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல்......" ( எபிரெயர் 7:3 )**

**ஆ! இது மற்றொரு விசித்திரமான வேதவாக்கியமாகும்!**

பக்கம் 602 இல் உள்ள **"EBC- விவிலியக்"** கருத்துக்களில் **சகோ. ரசல் அவர்கள்** இந்த வசனத்தைப் பற்றி விளக்கமளிக்கும்போது போது இந்த வார்த்தைகளை மெல்கிசேதேக்கு அடையாளப்படுத்திய விசித்திரமான ஆசாரியத்துவத்தைப் பற்றியது என்று குறிப்பிடுகிறார்.

ஆனால் இந்த வசனம் அவர் ஒரு நிழலாக இருந்த இந்த ஆசாரியத்துவ அம்சத்தை மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் மெல்கிசேதேக்கையும் குறிக்கிறது என்று நினைப்பதற்கு நம்மிடத்தில் காரணம் இருக்கிறது!

ஏனென்றால், மெல்கிசேதேக்கு உண்மையில் ஏனோக்கு என்றால், சாலேமின் மக்களுக்கு, அவருடைய பதிவு (**எபிரெயர் 7:3**)இதுபோன்றே வாசிக்கப்பட்டிருக்கும்.

**ஏனெனில் மெல்கிசேதேக்கின் உண்மையான அடையாளத்தைப் பற்றி சாலேமின் மக்களுக்கு முற்றிலும் தெரியாது.**

தேவனுடைய **பராமரிப்பின் கீழ்**, அவர் மெல்கிசேதேக்கு ஆக மாறுவதற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நம்மால் நன்கு கற்பனைசெய்து பார்க்க முடிகின்றது. **கீசாவில் பெரிய பிரமிட்டைக் கட்டுவது உட்பட,** மெல்கிசேதேக்கு ஆக ஒரு காலமளவும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றிய பின்னர் அவர் திடீரென்று **மறைந்திருக்க** வேண்டும்.

பின்னர் இது சாலேமின் அதிகாரிகள் கவலைப்படுவதற்கும், தங்கள் இராஜாவுக்கான தேடல் குழுக்களை அனுப்புவதற்கும் வழிவகுத்திருக்கலாம், ஆனாலும் அது தோல்வியையேத் தழுவியிருக்கும். இராஜாவோ அவருடைய மரித்த சடலமோ கண்டுபிடிக்கப்படவில்லை!
இதனால் இது அவரது **குடும்பத்தினருடனோ** அல்லது **உறவினர்களுடனோ** இதுகுறித்து விசாரிக்க அவர்களைத் தூண்டியிருக்க வேண்டும். மேலும் இது அவருக்கு குடும்பமோ உறவினர்களோ இல்லை என்னும் **அதிர்ச்சியூட்டும்** செய்தியை அளித்திருக்கும்.

இன்னும் ஆச்சரியம் என்னவென்றால், அவர் **பிறந்ததற்கான எந்த பதிவும்** இல்லை என்பதுதான்!

இது, சாலேமின் இந்த **மெல்கிசேதேக்கு** இராஜாவின் இந்தப் புதிதான மற்றும் விசித்திரமான பதிவைப் பதிவுசெய்ததற்கு வழிவகுத்திருக்கும். இந்தப் பதிவே எபிரெயர் புத்தகத்தில் அப்போஸ்தலன் பவுல் குறிப்பிடுகிறார்.

மகா பிரமிட்டைக் கட்டியவர் மெல்கிசேதேக்கு தான் என்பதை நாம் உணரும்போது மெல்கிசேதேக்கு என்பவர் தான் ஏனோக்கு என்பதற்கான **சான்றுகள் வலுவாகின்றன.**


**ஏன்? ஏன் இதை நாம் சொல்கிறோம்?**

ஏனெனில் மகா பிரமிட்டை உருவாக்குபவர் –

- **1.** .... **தேவனுடைய தெய்வீகத் திட்டத்தை** அதன் முழுமையில் அறிந்திருக்க வேண்டும்,

மற்றும்....

- **2.** .... ஒரு மகா பிரமிட்டைக் கட்டியெழுப்புவதற்காக தெய்வீகக் கரங்களில் கருவியாக தன்னை ஒப்படைக்க அவருக்கு ஒரு **தெய்வீக தொடர்பு** இருந்திருக்க வேண்டும்.




**இந்த இரண்டு தகுதிகளுக்கும், ஏனோக்கைப்போல் பொருந்தக்கூடியவர்கள் யாரும் இல்லை என்பது நாம் அறிந்ததே!!**

எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் **300 ஆண்டு**களாக "**தேவனோடு சஞ்சரித்துக்கொண்டு**", **யூதா:14**-ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி தேவனுடைய **முதல் தீர்க்கதரிசியாக** ஆவதற்கு, அவர் தெய்வீகத் திட்டத்தைப் பற்றி ஆழமான அறிவைக் கொண்டிருந்தார், **இரண்டாம் வருகை** மற்றும் மூன்றாம் உலகில் நடக்கவிருக்கும் உலகின் தனிப்பட்ட **நியாயத்தீர்ப்பு** பற்றிய அவரது முதல்

தீர்க்கதரிசனத்தின் விஷயம் மூலம் அவருடைய அறிவின் ஆழம் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படுகிறது!

மேலும் அவரது எடுத்துக்கொள்ளப்படுதலிலிருந்து அவர் தெய்வீகப் பராமரிப்பினால் பாதுகாக்கப்பட்டு வந்தார் மற்றும் நிச்சயமாக அவர் தேவனுடன் முழுமையான இணக்கத்துடன் இருந்திருக்க வேண்டும்.
ஏனென்றால் அவர் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு –

**"தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் … சாட்சிபெற்றான்."** என்று வாசிக்கிறோம்!

ஆகவே, ஏனோக்கு, தேவனுடைய சித்தத்தின்படி **இரண்டு மிக முக்கியமான நோக்கங்களை நிறைவேற்ற** ஒரு காலமளவும் மெல்கிசேதேக்காக **"ஆனார்"** –

- **ஒன்று** … மாபெரும் **'கற்சாட்சி'** கட்ட வேண்டும் என்பதற்காகவும் **(ஏசாயா 19:19)**
- **மற்றொன்று**… சிங்காசனத்தின்மேலுள்ள **ஆசாரியராய்** – மகிமையிலுள்ள கிறிஸ்துவின் **நிழலாக** மாற வேண்டும் என்பதற்காகவுமே!

இந்த மகிமையிலுள்ள கிறிஸ்துவின் நிழலாக மாற வேண்டுமானால், பதிவுசெய்யப்பட்டுள்ளப்படி கிறிஸ்துவின் அழியாமை நிலையினை அடையாளப்படுத்துவதும் தேவைப்படுகிறது –

## வெளிப்படுத்தல் 20:6

**"முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை........"**

**வெறும் சாவுக்கேதுவான மனிதனில் இதை எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்?**


ஆம்! **இரண்டாவது மரணம் என்றால் முற்றிலும் அழிவு என்பதாகும்** மற்றும் கல்லறைக்குச் செல்லும் நிலையானது **முற்றிலுமான அழிவைச்** சித்தரிக்கிறது. இந்த மகிமையான கிறிஸ்து நிலையை அடையாளப்படுத்த, **மெல்கிசேதேக்கும் கல்லறைக்குச் செல்லவோ** அல்லது **அழிவுக்குச் செல்லவோ** வேண்டியதில்லை.

மெல்கிசேதேக்கைப் பற்றிய இந்தக் காரியம் உண்மையாக இருந்தது என்ற **இந்த வியக்கத்தக்க விஷயத்தைப்** பற்றி பின்வரும் வசனத்தில் சாட்சியமளிக்கப்படுகிறது – --

**எபிரெயர் 7:8 – "அன்றியும், இங்கே, மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள்; அங்கேயோ, பிழைத்திருக்கிறான் என்று சாட்சிபெற்றவன் வாங்கினான்."**

இந்த வேத வசனம் ஆரோன் தசமபாகங்களைப் பெற்றுக்கொள்வதை மெல்கிசேதேக்கு தசமபாகங்களைப் பெற்றுக்கொள்வதுடன் ஒப்பிடுகிறது! ஆனால் மெல்கிசேதேக்கு பற்றி என்ன கூறப்படுகிறது என்பதைக் கவனியுங்கள் –

"**பிழைத்திருக்கிறான் என்று சாட்சிபெற்றவன்**".



**உங்களால் இதை நம்ப முடிகிறதா?**

முதலாம் நூற்றாண்டில் இந்த மெல்கிசேதேக்கைப் பற்றிய **அப்போஸ்தலன் பவுலினுடைய எழுத்து**, அந்த வார்த்தைகளை எழுதும் நேரத்தில் "**பிழைத்திருக்கிறான் என்று...**" நமக்கு கூறுகிறது.

**எனவே மெல்கிசேதேக்கு ஒருபோதும் மரித்ததில்லை என்று நம்பப்படுகிறது, ஏனெனில் அவருடைய "ஜீவனின் முடிவு" குறித்த பதிவுகள் எதுவும் இல்லை.**

ஆகவே, உறுதியான ஆதாரங்களுடன் நாம் காண்பது யாதெனில், **ஒரே மனிதன்** மட்டுமே தகுதியுள்ளவராகவும், **மாபெரும் மெல்கிசேதேக்கு** ஆக ஆயத்தமாக்கப்பட்டவராகவும் இருந்திருக்க முடியும் – அவர் **ஏனோக்கே!**

இந்த மாபெரும் நோக்கத்திற்காகவே தேவன் அவரைத் தேர்ந்தெடுத்து.... "**மரணத்தைக் காணாதபடிக்கு**"... எடுத்துக்கொண்டார்!

மெல்கிசேதேக்கின் அடையாளத்தைப் பற்றிய **இந்த மாபெரும் உண்மையை அப்போஸ்தலர் பவுல் அறிந்திருந்தார்** என்று நாங்கள் நம்புகிறோம் என்பதை இங்கே வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். இந்த நம்பிக்கையை **எபிரெயர் புத்தகத்தில்** நாம் வாசிக்கும் ஒரு வசனத்தின் அடிப்படையில் பெற்றிருக்கிறோம் –

**எபிரெயர் 5:10, 11 – "மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார். இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம்; நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்."**

**அதைக் கவனித்தீர்களா?**

**ஆ! அந்த "விஸ்தாரமாய்ப்" மற்றும் 'விளங்கப்பண்ணுகிறது "அரிதாயிருக்கும்" என்பது என்னவாக இருக்க முடியும்?**

**அது என்னவெனில், மெல்கிசேதேக்கு தான் இந்த ஏனோக்கு என்னும் இந்த அவிழ்க்கப்பட்ட இரகசியம் தான்!!**

**ஆம்! அப்போஸ்தலர் பவுல் அறிந்திருந்தார் !!**

**இப்போது ஏனோக்கின் நிலை என்ன?
அவர் எங்கே உள்ளார்?**

அவர் இந்தப் பூமியில் தான் எங்காவது **வாழ்ந்துக்கொண்டிருப்பார்**. இன்னும் ஆதாமின் மரண தண்டனையின் கீழ் அவர் இருந்தாலும், தேவனுடைய வல்லமையால் அவரது **அபூரண நிலையில்** வைக்கப்பட்டு, உயிர்த்தெழுதல் என்னும் வெகுமதியை ஏற்றக்காலத்தில் கிடைத்திடக் காத்திருக்கிறார்!

ஒரு வயதான மனிதராக என்றும் மரித்திராது வாழ்ந்து வரும் ஒரு மனிதனைப் பற்றின கதைகள் மற்றும் கட்டுக்கதைகள் இப்போதும் சொல்லப்படுகின்றன. அவர் தொடர்ந்து வாழ்ந்துக்கொண்டேயிருப்பார், அதே நேரத்தில் அவரைச் சுற்றியுள்ள மற்றவர்கள் அனைவரும் மரித்துக்கொண்டேயிருப்பர்.

ஏனோக்கு முற்பிதாக்கள் வகுப்பாராக வருகிறார், ஏதேனிலிருந்து வரும்

மூன்றாவது நதியான இதெக்கேல் (**ஆதியாகமம் 2:14**) குறிக்கும் **மூன்றாவது உயிர்த்தெழுதலைப்** பெறுவார்.

அவரது வெகுமதி, 1878 முதல் தொடங்கப்பட்ட சபை வகுப்பாரின் **முதல் உயிர்த்தெழுதலின்** நிறைவுக்காகவும், அதன் பிறகு வரும் "**திரள்கூட்ட**" வகுப்பாரின் இரண்டாவது உயிர்த்தெழுதலின் நிறைவுக்காகவும் காத்திருக்கிறது.

ஆனால் இன்னும் உயிருடன் இருக்கும் ஒரே முற்பிதாவாக இருப்பதால், மனித பரிபூரணத்திற்கான தனது மாற்றத்தை அவர் தனது வகுப்பாரிலேயே முதலாவதாக பெறுவார்..

**அது எப்படி இருக்கும்? உயிர்த்தெழுப்பப்படுவதற்காக ஏனோக்கு மரிக்க வேண்டுமா?**

**"மேன்மையான உயிர்த்தெழுதலினுடைய" பரிபூரண மாம்சத்தின்** விதத்தைப் பற்றி நாம் வாசிக்கலாம் –

**யோபு 33:25**

**"அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப்பார்க்கிலும் ஆரோக்கியமடையும்; தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்."**

ஆ! இந்த விஷயத்தைக் குறித்து பலர் ஆச்சரியப்படலாம். ஏனோக்கு உயிருடன் இருக்கும்போது, முற்பிதாக்களின் '**மேன்மையான உயிர்த்தெழுதலினுடைய**' **பரிபூரண மனித உடலை** எவ்வாறு பெற முடியும்? அதுவும் அவர் தற்போது இருக்கும் **அபூரண உடல் வடிவத்தில்** எவ்வாறு பெற முடியும்? அவர் முதலில் மரித்து, தற்போதைய அபூரண உடலை ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியமில்லையா?

இந்தக் கேள்விக்கான எங்கள் பதில் ஒரு வசனத்தில் காணப்படுகிறது –

**2 இராஜாக்கள் 5:14**

**"அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்."**

ஆம்! இது அந்த ஏழுதரம் யோர்தான் நதியில் முழுகினபோது அல்லது நீரில்

அமிழ்ந்தபோது, நாகமானின் குஷ்டரோக மாம்சம் **அதிசயமான** மற்றும் **உடனடி மாற்றத்திற்குட்பட்டது** பற்றியதொரு சாட்சியாகும்.

ஆ! என்னே ஓர் அதிசயம் நடந்தேறினது.

முற்பிதாக்களின் மூன்றாவது உயிர்த்தெழுதலுக்கான நேரம் வரும்போது **ஏனோக்கிற்கும் இது போலவே நடக்கும்** என்று நாங்கள் நம்புகிறோம்..

**ஆம்! ஏழாவது முறையாக யோர்தானிலிருந்து வெளியே வந்தபோது நாகமான் அனுபவித்ததைப் போலவே இது ஒரு உடனடி மாற்றமாக இருக்கும். (2 இராஜாக்கள் 5:14)**

ஏனோக்கு, **5000 ஆண்டுகளுக்கும் மேலாக "மாம்சத்தில்"** உயிருடன் இருப்பது தேவனுடைய மகிமை குறித்து மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய காட்சி/பார்வை சார்ந்த ஆதாரங்களில் ஒன்றாக இருக்கும் – இது போன்ற பிற ஆதாரங்கள் பின்வருமாறு.....

- .... **நோவாவினுடைய பேழையின்** கண்டுபிடிப்பு,
- .... **கீசாவின் மகா பிரமிடு**
- .... **காணாமல்போன உடன்படிக்கைப் பெட்டி** (எரேமியா 3:16)
- **....மற்றும் எருசலேமில் நம்முடைய கர்த்தருடைய சிலுவையில் அறையப்பட்ட உடலின் வெளிப்பாடு.**

(கர்த்தரின் சிலுவையில் அறையப்பட்ட உடல் தேவனால் பாதுகாக்கப்பட்டு, **எருசலேமில் நித்திய காலத்திற்கும் காண்பிக்கப்படும்** (ஏனென்றால் அவரது **மாம்சம் ஒருபோதும் அழிவைக்** காண்பதில்லை காணவும் முடியாது) என்ற நம்முடைய நம்பிக்கையானது.....**அப்போஸ்தலர் 2:31/ சகரியா 12:10/ ஏசாயா 52:14** – எனும் வசனங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது)


ஆகவே, ஏனோக்கின் மர்மம் அவிழ்க்கப்பட்டதின் முடிவுக்கு வந்துவிட்டோம்! உண்மையிலேயே அவருடைய ஜீவியம் தேவனுடைய மகிமைக்காய் இருந்து வந்துள்ளது – உன்னதமானவரின் சாத்தியமான பரிசுத்தவான்களான நமக்கு ஒரு உண்மையான அகத் தூண்டுதலாகவும் இருக்கின்றது!



**பிரியமான தேவனுடைய பரிசுத்தவானே, உந்தன் கதை என்னவாக இருக்கும்?**
**அது ஏனோக்கின் ஜீவியத்தைப் போல தேவனுக்கு மகிமை தருமா ??**

கர்த்தர் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளைப் புரிந்துகொள்வதில் அவருடைய ஆசீர்வாதங்களைச் வர்த்திக்கப்பண்ணுவாராக.....

ஆமென்



புதுசிருஷ்டியின் பொக்கிஷசாலை

See more Books & Articles at
www.foodfornewcreature.com